# ??????? ???? ?????? ????????????????? ????????????? ?????????? ??????????????? ???????????? ?????????????? – ???????? ????????????? ????????????? ?????????????? ??????????

சிறிலங்காவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அந்நாட்டு அரசாங்கம் எடுக்கக்கூடிய காத்திரமான நடவடிக்கைகள் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம் (ITJP) வெளியிட்டுள்ள பட்டியலிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அவர்கள் சிறிலங்கா அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவதற்கும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக ஜெனீவாவில் நடந்த ஐ.நா. மனித உரிமைகள் அமர்வில் தெரிவித்திருந்த கருத்துக்குப் பதில்தரும்விதத்திலேயே இலண்டனை மையமாகக் கொண்டு செயற்படும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம் அமைப்பு இப்பரிந்துரைகளை வெளியிட்டுள்ளது.

இப்பரிந்துரைகளில், இறுதிப்போரின்போது இராணுவத்திடம் சரணடைந்தவர்களில் பட்டியல் வெளியிடுதல், மீண்டும் துயிலுமில்லங்கள் அமைந்திருந்த இடங்களில் கல்லறைகளை நிறுவ அனுமதிப்பதுடன், குடும்பங்களுக்கு மானியங்கள் வழங்குதல், மே-18 இனப்படுகொலை தினத்தை எவ்வித அச்சமுமின்றி அனுசரிக்க அனுமதித்தல், ‘புனர்வாழ்வு’ முகாம்களை உடனடியாக மூடுதல், புலம்பெயர்ந்து வாழும் ஆயிரக்கணக்கானோர் உள்ளிட்ட, புனர்வாழ்வு வழங்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு சிறிலங்கா அரசாங்கம் இழப்பீடு வழங்கல், வடக்குக் கிழக்கில் பொதுமக்கள் நிருவாகத்தில் இராணுவத்தின் தலையிடுகளை நீக்குவதுடன், அங்கிருந்து இராணுவப் பிரசன்னத்தை அகற்றுதல், இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தனியார் காணிகளை அவர்களிடம் திருப்பி ஒப்படைத்தல், வடக்குக் கிழக்கில் இந்துக்கோயில்களில் நிலங்கள் மீது புத்தவிகாரைகள் அமைக்கப்படுவதை நிறுத்துவது உள்ளிட்ட பல பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

அவ்வமைப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கை கீழே இணைக்கப்பட்டுள்ளது.

---

**????.????????????????????? ?????????**

# ????????? ???????????





தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 35 ஆவது நினைவு தினத்தின் இறுதிநாள், இன்றைய தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தியாக தீபம் தீலிபன் உயிர்நீத்த 10.48 மணிக்கு நினைவேந்தல் ஆரம்பித்ததுடன், பொதுச் சுடரும் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, திலீபனின் உருவப்படத்திற்கு பல்கலைக்கழக சமூகத்தினரால் மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் பலரும் உணர்வு பூர்வமாக கலந்துகொண்டனர்.

இதன்போது பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





# Best dating sites for over 50

Many local newspapers had online personals in the mid 1990s but were bought out by these big dating sites. From some of the comments it really shows how desperate dating sites are for money that they even advertise in comment sections. You have a much better chance going to local events and you will probably spend less than what you would spend on an online dating site.

Other apps have indicated that they might actually move closer to Facebook. For example, Bumble, founded by a former Tinder executive, said they had already reached out to Facebook regarding how to collaborate. And, “One thing everyone seems to agree on is that Facebook’s effectively endorsing online dating will be a huge legitimization event for the industry,” says Jefferies Internet analyst Brent Thill. According to Amanda Bradford, chief executive of The League, an elite dating app, “Facebook is validating that dating is a high-tech industry with really interesting and hard problems to solve. Still, Facebook could face some obstacles in building enough separation between the dating service and the legacy social network; some users might not like having both activities live on one app.

After giving him some time to cope with his cat passing away, he made plans to see her again and she was thrilled. He canceled the date last minute again because he said his grandma had died. Although this seemed too tragic to be true, she gave him the benefit of the doubt that he was telling the truth. Additionally, if someone is giving you a checklist right away of all of the things they want in a future partner, this may be a red flag for some controlling behaviors. It’s one thing if they express their non-negotiables but it’s another thing entirely if they are listing required traits. If you feel like someone is already trying to change things about you to suit their needs, that’s not okay. How someone initiates a conversation with you will say a lot about how they view you as a person and how they might treat you as a partner.

Online dating users are more likely to describe their overall experience with using dating sites or apps in positive, rather than negative, terms. Some 57% of Americans who have ever used a dating site or app say their own personal experiences with these platforms have been very or somewhat positive. Still, about four-in-ten online daters (42%) describe their personal experience with dating sites or apps as at least somewhat negative. Happily, there are some dating services that are looking to overcome the vanity. For example, Hinge matches people based on personality and preferences and lets you create a more interesting and rounded profile to draw people in. One of the few dating sites designed for affairs, Ashley Madison connects users for discreet encounters.

Basically all a guy like you has to do is instantly grab her attention in a memorable way with

both your profile and your messages, then spend the least amount of time possible convincing her to meet you in person. For those who are hesitant to enter the online dating world for reasons related to safety or awkward conversation lulls, Double aims to take the pressure off with Double dates as opposed to one-on-one.

State things that are really important to you and be done with it. Connor turned an attempt at small talk into a rant about “gold-digging whores,” and the dating app was not having it. Matt-But what about when you said you would meet me in real life and we would lose our virginity together. One Love educates young people about healthy and unhealthy relationships, empowering them to identify and avoid abuse and learn how to love better. If you are going somewhere that serves alcoholic beverages, most bartenders are using secret codes to help customers signal, privately, when they need help if they’re getting harassed or feeling unsafe on a bad date.

With no financial requirement, free sites will naturally attract a greater proportion of people who are not really committed to finding a genuine relationship. Memberships you gain additional features such as being able to send more messages and receiving event discounts.

---

# NAMATHUEELANADU- E- PAPER – SEPTEMBER 2022


நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 03 மலர் 25 செப்டெம்பர் 2022 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com
Simply Scan the QR code Your Phone Camera
Download the NamathuEelanadu app
"திலீபனின் தியாகம் இந்திய மாயையை கலைத்தது, தமிழ்த்தேசிய உணர்வை தட்டியெழுப்பியது"
-தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்
விடுதலைத் தீ மூட்டியோன்

???????????? ??????? ?????????????

# ??? ????? ????????????? ???????????????? ??????????









இலங்கையின் முன்னணி கேலிச்சித்திரக் கலைஞரும் வடமாகாண ஊடகவியலாளர்களது கூட்டிணைந்த கட்டமைப்பான யாழ். ஊடக அமையத்தின் அங்கத்தவருமான மறைந்த ஊடகவியலாளர் அமரர் அஸ்வின் சுதர்சனின் 6 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் அவர் ஞாபகார்த்த ஊடக கற்கை மாணவருக்கான புலமைப்பரிசில் வழங்கல் நிகழ்வும் யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை (25.09.2022) பிற்பகல் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனும்;, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன், யாழ்.மறைமாவட்ட கத்தோலிக்க பத்திரிகையின் பிரதம ஆசிரியர் வண.பிதா றொசான் அடிகளார், யாழ்.பல்கலைக்கழகத்தின் ஊடக கற்கைகள் துறை தலைவர் பேராசிரியர் ரகுராம் ஆகியோரும்

கலந்து கொண்டனர். அத்துடன் ஊடகவியலாளர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் அஸ்வினின் உறவினர்களும் நண்பர்களும் நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

யாழ்.ஊடக அமையத்தின் நிறுவுனர் தயாபரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வு இரு நிமிட அகவணக்கத்துடன் ஆரம்பமானது. அஸ்வினின் திருவுருவப்படத்திற்கான ஈகைச்சுடரினை அவரது பெற்றோர்கள் ஏற்றிவைக்க மலர் மாலையினை சிரேஷ்ட ஊடகவியலாளர் நிக்சன், யாழ்.பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறை தலைவர் பேராசிரியர் ரகுராம் மற்றும் அஸ்வினின் சகோதரி செல்வி சுவர்ணா ஆகியோர் அணிவித்தனர்.

தொடர்ந்து மலர் அஞ்சலியினை பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன் ஆகியோர் ஆரம்பித்து வைக்க தொடர்ந்து அரங்கில் இருந்தோரும் மலர் அஞ்சலியில் இணைந்துகொண்டனர்.
அதனைத்தொடர்ந்து அஸ்வின் குறித்த நினைவுரைகள்; இடம்பெற்றதுடன் விசேட நிகழ்வாக அஸ்வின் ஞாபகார்த்த புலமைப்பரிசிலை பெறும் யாழ்.பல்கலைக்கழக ஊடக கற்கை மாணவிக்கு தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் அஸ்வினின் பெற்றோர் இணைந்து 50 ஆயிரம் ரூபா பணத்தொகையினையும், அஸ்வின் நினைவு சின்னத்தையும் வழங்கிவைத்தனர்.

அஸ்வின் குறித்து இடம்பெற்ற நினைவுரைகளில் முதலாவதாக உரையாற்றிய யாழ். கத்தோலிக்க பத்திரிகை ஸ்தாபனத்தின் பிரதம ஆசிரியர் வண.பிதா றொசான் அடிகளார்,




அஸ்வின் கோடுகளால் பேசியவர் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர்; தலை சிறந்தவொரு கார்டூனிஸ்ட். **Cartoonist** ஐ தமிழில் மொழிபெயர்க்கின்ற போது வழக்கமாக எல்லோரும் கேலிச்சித்திரக்கலைஞன் என்று சொல்கிறார்கள். அதில் எனக்கு உடன்பாடு இல்லை. அவர்கள் கேலி செய்வதாக வரைவதில்லை. தங்களின் படங்களின் வழியாக சமூகத்தின் யதார்த்தத்தை பேசுவார்கள். அவ்வாறே அஸ்வினும் தனது படங்கள் வழியாக பேசினார். அஸ்வினை நான் ஒரு தீர்க்கதரிசியாக பார்க்கிறேன். கத்தோலிக்க விவிலியத்தில் பல தீர்க்கதரிசிகள் இறைவாக்கினர்கள் தோன்றி மறைந்ததாக சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் அவ்வப்போது

இருக்கின்ற சமூக பிரச்சினைகளை முன்கூட்டியே வெளிகொண்டு மக்களுக்கு எடுத்து கூறுபவர்களாக இருந்தார்கள்.

அவ்வாறு தான் அஸ்வினின் ஆற்றலும் இருந்தது. இறைவன் கொடுத்த திறமைகளால் அவர் அதனை சீராக செய்து முடித்தார். உண்மையை எவ்வாறு தெளிவாக வரைபடங்கள் மூலமாக வெளிப்படுத்தலாமோ அதனை சிறப்பாக அவர் வெளிப்படுத்தியுள்ளார். அவரது கார்ட்டூன்கள் இன்றைய காலத்திற்கும் பொருந்துவனவாக கதை சொல்லுவனவாக இருக்கின்றதை பார்க்கக்கூடியதாக உள்ளது. இதனாலே அவரை தீர்க்க தரிசன ஓவியர் என விழிக்கமுடிகின்றது. அவர் போதைப்பொருள் குறித்து அன்று வரைந்த கார்ட்டூன் இலங்கையில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ள இன்றைய சூழலிலும் நன்கு பொருந்துவதாக உள்ளதனை ஒரு உதாரணமாக சொல்லாம்.

இவ்வாறான அசாத்திய திறமை வாய்ந்த ஊடகவியலாளரை நாம் இழந்திருப்பது தமிழ் சமூகத்திற்கு ஒரு பேரிழப்பு. இந்நிலையில் அவரின் பெயரால் அவரது குடும்பத்தினரால் ஊடககற்கை நெறியை தொடரும் மாணவர்களுக்கு கற்றல் உதவிக்காக வழங்கப்படும் புலமைப்பரிசிலை வரவேற்கின்றேன் என அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து உரையாற்றிய பிரதம விருந்தினர் சி.வி. விக்னேஸ்வரன்,



இளவயதில் திரு.அஸ்வின் அவர்களைத் தமிழ்த் தாய் இழந்தமை இலங்கைத் தமிழ் ஊடகப் பரப்பில் ஈடு செய்ய முடியாதொரு பெரும் இழப்பு என்றால் அது மிகையாகாது. அவர் நகைச்சுவைச் சித்திர விற்பன்னராக இருந்து வந்த அதே வேளையில் குறும்பட இயக்குனராகவும் பத்திரிகையாளராகவும் வலம் வந்தவர். “கேட்டியளே சங்கதி” என்ற பத்தி எழுத்திற்காக இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தினால் 2011 ஆம் ஆண்டு அவருக்கு சிறந்த பத்தி எழுத்துக்கான அதியுயர் விருதும் (டீநளவ ஊழடரஅn றுசவைநச) கிடைத்தது. இலங்கைச் சினிமாவை வளர்ச்சிப் பாதையில் நகர்த்த வேண்டும் என்றும் அவர் இங்குள்ள கலைஞர்களுக்கு அங்கீகாரங்கள் கிடைக்க வேண்டும் என்றும் அவாக் கொண்டிருந்தார். ஆனால் தமது 36 ஆவது வயதில் திடீரென்று மாரடைப்பால் இறைவனடி சேர்ந்து விட்டார்.

ஒரு சிறந்த நகைச்சுவை சித்திரவியலாளர் பொதுவாக 5 விடயங்களைப்பாவிப்பார். குறியீடு, தலையங்கங்களும் விளக்க அடையாளங்களும், ஒப்புவமை, வஞ்சப்புகழ்ச்சி, மிகைப்படுத்தல் இவை அனைத்து அஸ்வினின் ஓவியங்களில் அடங்கியுள்ளன.
திருநீற்றுக் குறிகள், ஒரு குங்குமப் பொட்டு, வெள்ளைத் தாடி, கண்ணாடி போன்றவற்றைக் கீறி அதன் மேல் வேட்டி சால்வையைப் போர்த்தி வரைந்த வரைவு தான் அவரது ஓவியங்களில் என்னுடைய குறியீடாக அமைந்து விட்டது.

ஒரு முறை முதலமைச்சரான என்னை சுதந்திரமாக நகர விடாமல் என் கட்சி நடந்து கொண்டதை பின்வருவமாறு நகைச்சுவைச் சித்திரத்தில் வரைந்தார் – ஒரு மாடு ஓட எத்தனிக்கிறது. வாலைப் பிடித்து ஒருவர் அதனை நிறுத்தப் பார்க்கிறார். சிலர் ஜல்லிக்கட்டு மாட்டை நிறுத்த எத்தனிப்பது போல் அந்த மாட்டின் மீது தாவிப் பிடித்து நிறுத்தப் பார்க்கின்றார்கள். பின்னால் நின்று ஒருவர் “அடக்கு”, “அமுக்கு” என்று அலறுகின்றார்! ஆனால் மாடோ முன்னேறிச் செல்கின்றது. இதில் மாடு நான், வாலைப் பிடித்தவர் நண்பர் மாவை, “அடக்கு”, “அமுக்கு” என்று அலறியவர் சம்பந்தன் ஐயா மற்றும் மாட்டின் மீது தாவி ஏறி நிறுத்தப்பார்த்தவர்கள் கட்சியின் மாகாணசபை உறுப்பினர்கள்! மாட்டை என் போன்று சித்திரிக்க மாட்டின் நெற்றியில் திருநீற்றுப் பட்டை, கண்ணாடி, சிவத்த குங்குமப் பொட்டு வரையப்பட்டிருந்தன. தாடி இல்லை! எனது முக்கியமான குறியீடாக மாட்டின் கழுத்தைச் சுற்றி பச்சை வெள்ளை சிவப்பு நிறம் கொண்ட சால்வை பறப்பதை வரைந்து காட்டுகின்றார் அஸ்வின்! குறியீடுகளைக் கொண்டு தமது எண்ணங்களை வெளிக்கொண்டு வந்ததில் வல்வராக இருந்தார் திரு.அஸ்வின் அவர்கள்.

ஆகவே சிறந்த ஒரு நகைச்சுவைச் சித்திரக்காரரின் குணவியல்புகளை அஸ்வின் அவர்கள் தமது வாழ்க்கையில் எடுத்துக் காட்டினார். அப்படி இருந்தும் சற்றும் ஆணவம் அல்லது அகந்தை இன்றியே தனது செவ்வியை அந்தக்காலத்தில் வழங்கியிருந்தமை அவரின் அப்போதைய வீடியோ கசட்டின் வாயிலாக வெளிவருகின்றது. அதனை எனக்கு அனுப்பிய அவரின் சகோதரருக்கு எனது நன்றிகள் உரித்தாகுக!

இறைமையே எம்மை வழிநடத்துகின்றது என்பதை அறியாதவன் அகந்தைக்கும் ஆணவத்திற்கும் அடிமையாகின்றான். அப்பேர்ப்பட்டவர்கள் தான் தோல்விகளைக் கண்டு மிரண்டு போகின்றவர்கள். தோல்விகளை இறைவன் கற்றுக் கொடுக்கும் பாடங்களாக ஏற்றுக் கொள்வதே உயர்ந்த மனிதர்களின் பண்புகள். அந்த விதத்தில் அஸ்வின் சுதர்சன் மக்களுள் ஒரு உயர்ந்த மனிதனாக வைத்து புகழப்பட வேண்டியவர்.
அவர் நினைவாக பல்கலைக்கழக ஊடகக் கற்கை மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்குவது சாலச் சிறந்தது. வரவேற்பிற்குரியது என தனது உரையில் தெரிவித்தார்.

தொர்ந்து சிரேஷ்ட ஊடகவியலாளர் நிக்ஷன் தனது உரையில் தற்போது நடைபெற்று வரும் ஐ.நா. அமர்வு குறித்து பல கற்பனைகள் இருக்கின்றபோதிலும் அதனை அப்படியே வரையக்கூடிய அஸ்வின் தற்போது இல்லாமை தமிழ் ஊடகப்பரப்பில் பெரும் இழப்பு என்று குறிப்பிட்டார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் நமது ஈழநாடு அனுசரனையுடன் அவரது குடும்பத்தினரால் ஆரம்பிக்கப்பட்டு ஆண்டுதோறும் வழங்கப்பட்டுவரும் அஸ்வின் ஞாபகார்த்த புலமைப்பரிசில் திட்டத்தில் இம்முறை யாழ்.பல்கலைக்கழகத்தில் துணை வேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா அவர்களினால் தெரிவு செய்யப்பட்ட ஊடக கற்கையில் சிறப்பு கலைமாணியாக இரண்டாம் ஆண்டில் கல்வியைத்தொடரும் மாணவி ஒருவருக்கு கற்றல் ஊக்குவிப்புக்கான பணத்தொகையாக ரூபா 50 ஆயிரம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




JAFFNA
PRESS
CLUB


Journalist Aswin



---

???? ????????? ????? ?????????????

# ?????? ?????????? : ?????????
# ????????????? ?????????



உயர் பாதுகாப்பு வலயப் பிரகடனத்திற்கு எதிராக மருதானை டீன்ஸ் வீதியில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர் புகை மற்றும் நீர்தாரைப் பிரயோகத்தை மேற்கொண்டதால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் இந்த போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


fresh
PHARMACY



# ?????????? ?????? ???????????? ??????????? ???????? ????????????? ?????????!




ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை முன்வைத்துள்ள பொறிமுறைகள் மூலம் இலங்கையில் இந்திய இராணுவத்தை நிலைநிறுத்தியபோது இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பாகவும் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என நான்கு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் கோரியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலியை மேற்கோள் காட்டி ஆங்கில ஊடகமொன்று இது தொடர்பாக செய்தி வெளியிட்டுள்ளது.

மோதலின்போது இடம்பெற்ற சம்பவங்கள் உள்ளிட்ட அனைத்து சர்வதேச குற்றங்களுக்கும் தீர்வு காண இலங்கை மீது வலுவான தீர்மானத்தை கோருவதாக மீனாக்ஷி கங்குலி தெரிவித்ததாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இந்திய படையினர் போர் நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவதற்காக அனுப்பப்பட்டிருந்தபோது இடம்பெற்ற முறைகேடுகள் முறையாக விசாரிக்கப்பட்டு, பொறுப்புக்கூறல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளதாகவும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# [illegible]



### – [illegible] –



[illegible] (NEWSREPORTER)

சிறிலங்காவின் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின்மீது தாம் கடும் அதிருப்தி கொண்டிருப்பதாக பிரித்தானிய தாராளவாத ஜனநாயக் கட்சித் தலைவாரான அதி மதிப்பிற்குரிய சேர். எட்வேட் டேவி (Rt. Hon. Sir Ed Davey MP) மற்றும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் வெளிவிவகாரப் பேச்சாளராருமான மதிப்பிற்குரிய. சாரா ஒல்னி (Hon. Sarah Olney MP)ஆகியோர் இணைந்து பிரித்தானியாவின் புதிய வெளிவிவகார அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானியாவின் புதிய அரசாங்கத்தில் வெளிவிவகார அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதி மதிப்பிற்குரிய. ஜேம்ஸ் கிளவெர்லே (Rt. Hon James Cleverly MP) அவர்களுடனான சந்திப்பொன்றினை வேண்டி அவருக்கு எழுதிய கடிதத்திலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளார்கள்.



சிறிலங்காவில் தற்போதுள்ள பொருளாதார, அரசியல் மற்றும் மனித உரிமைப் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டிய அவர்கள், ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின்கீழ் நடைபெறும் அடக்குமுறைகள் தொடர்பாக தங்கள் கரிசனையை வெளிப்படுத்தியதுடன் அங்கு நிலவும் உணவு, மருந்துப்பொருட்கள், எரிபொருள் தட்டுப்பாடுகளால் பல மில்லியன் கணக்கான மக்கள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

சிறிலங்காவிலுள்ள குடிமக்கள் ஒரு அரசியல் சீர்திருத்தத்தைக் கோரி வீதிகளில் இறங்கும்போது, பிரித்தானிய அவர்களுக்கு துணை நிற்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்கள். அத்துடன், அங்கு வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக நீண்டகாலமாக நடைபெற்றுவரும் மனித உரிமை துஸ்பிரயோகங்கள் தொடர்பாக தங்கள் கரிசனையை வெளிப்படுத்த விரும்புவதாகவும் அவர்கள் இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

மிக முக்கியமாக இலங்கையில் நடந்த தமிழர் இனப்படுகொலையை பிரித்தானிய அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும் என்றும், இது விடயத்தில் பிரித்தானிய அரசாங்கம் பாராமுகமாக இருக்கமுடியாது என்றும் வலியுறுத்தியுள்ளார்கள். மேலும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, உரிய தண்டனை வழங்கப்படுவதை உறுதிசெய்யவேண்டும் என்பதை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வலியுறுத்தவேண்டும் என்றும் வெளியுறவுச்செயலரைக் கேட்டுக்கொள்வதாக அவர்கள் இருவரும் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இக்கடிதத்தின் பிரதி கிழே இணைக்கப்பட்டுள்ளது.

FAO-Foreign-Secretary-22.09.22Download

---





மறைந்த ஊடகவியலாளரும் கேலிச்சித்திர கலைஞருமான அஸ்வின் சுதர்சனின் 6 ஆண்டுகள் நினைவேந்தல் நிகழ்வும், அவர் ஞாபகார்த்த ஊடக கற்கை மாணவருக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (25.09.2022) யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை ஊடக அரங்கில் கருத்தாளமிக்க மற்றும் தீர்க்கதரிசனம் கூறும் கார்ட்டூன்களால் அனைவரையும் கவர்ந்திழுத்து தனக்கெனவொரு முத்திரையை பதித்த முன்னணி கேலிச்சித்திரக்கலைஞர் அஸ்வின் சுதர்சன் மறைந்து ஆறு ஆண்டுகளான நிலையில், அவரை நினைவுகூறும் முகமாக யாழ். ஊடக அமையத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 25.09.2022 அன்று பி.ப.3.மணிக்கு நினைவேந்தல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில் அஸ்வின் குறித்த ஞாபகார்த்த உரைகள் இடம்பெறவுள்ளதுடன் சிறப்பாக அஸ்வினின் குடும்பத்தினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஊடக கற்கைநெறியை தொடரும் மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட தேவையுடைய மாணவருக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் நமது ஈழநாடு அனுசரனையுடன் ஆரம்பிக்கப்பட்டு ஆண்டுதோறும் வழங்கப்பட்டுவரும் அஸ்வின் ஞாபகார்த்த புலமைப்பரிசில் திட்டத்தில் இம்முறை யாழ்.பல்கலைக்கழகத்தில் துணை வேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா அவர்களினால் தெரிவு செய்யப்பட்ட, ஊடக கற்கையில் சிறப்பு கலைமாணியாக இரண்டாம் ஆண்டில் கல்வியைத்தொடரும் மாணவி ஒருவருக்கு கற்றல் ஊக்குவிப்புக்கான பணத்தொகையாக ரூபா 50 ஆயிரம் வழங்கப்படவுள்ளது.

யாழ்.ஊடக அமையத்தினால் முன்னெடுக்கப்படும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அஸ்வினின் நினைவுகளை பகிர உங்கள் அனைவரிற்கும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

ஈழநாடு பத்திரிகையில் தனது ஊடகப்பயணத்தை ஆரம்பித்த அஸ்வின், வலம்புரி, சுடரொளி, வீரகேசரி, தினக்குரல் பத்திரிகைகளில் தனக்கான முத்திரிகைகளை பதித்துள்ளார். அதேவேளை வீரகேசரியின் யாழ்.ஓசை பதிப்பின் ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

இதில் இவர் எழுதிய கேட்டியளே சங்கதி என்ற பத்தி எழுத்து பல இடங்களிலும் எதிரொலித்தது. அந்த

எழுத்துகள் ஓர் மௌனப் புரட்சியையும் செய்தது. இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனமும் சிறந்த ஊடகவியலாளர் விருதை கேட்டியளோ சங்கதி பத்திக்காக வழங்கிக் கௌரவித்தது.

இறுதியாக தினக்குரல் பத்திரிகையில் இவர் வரைந்த கருத்தாழமிக்க கார்ட்டூன்கள் வாசகர்களை மட்டுமின்றி அரசியல் தலைவர்களையும் பேசவைத்தது. அவரது காட்டூன்கள் பல இன்றை காலத்திற்கும் பொருத்தமான தீர்க்கதரிசன ஓவியங்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கார்ட்டூனிஸ்ட் அஸ்வின் நினைவேந்தலும் புலமைப்பரிசில் வழங்கல் நிகழ்வும்

காலம் : 25.09.2022 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : பி.ப. 3.00 மணி

இடம் : யாழ்.ஊடக அமையம்

## நிகழ்ச்சி நிரல்



- நினைவு சுடரேற்றல், மலரஞ்சலி
- அஸ்வின் நினைவஞ்சலி உரைகள்
- ஊடக கற்கை மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கல்

உங்களை அன்போடு அழைக்கின்றோம்

ஏற்பாட்டுக்குழு,
யாழ்.ஊடக அமையம்
84ஏ, இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்

JPC
JAFFNA PRESS CLUB




# ????? ????? ???????? ??????????
# ?????????????? ??????????-?????????




தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இம்முறை எழுச்சிபூர்வமாக நடைபெறும் என யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். கடந்த காலங்களை விட இம்முறை நிலைமை சற்று சீராகக் காணப்படுவதால், தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை இம்முறை எழுச்சியாக நினைவுகூருவதற்கு தீர்மானித்துள்ளோம்.

அவர் இனத்தின் அடையாளம் என்ற படியால், அவர் மக்களுக்கு சொந்தமானவர்.

ஆகவே நினைவேந்தல் நிகழ்வுகளை கட்சி மற்றும் அமைப்புகள் சாராமல், பொதுவாக உருவாக்கப்பட்டுள்ள குழுவே இம்முறை மேற்கோள்ளும்.

நினைவேந்தல் இடம் மாநகர சபை எல்லைக்குள் இருக்கிறது. ஆகவே அதற்கான வழிமுறைகளை மாநகர சபை என்ற ரீதியில் கூறுவது சரியாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

நினைவு தினமன்று கவி அரங்கம் உள்ளிட்ட கலை நிகழ்வுகளை நடத்துவதற்கு நினைவேந்தல் குழு தீர்மானித்துள்ளது. அதற்கு அமைவாக நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இது தவிர சில தரப்புக்கள் நினைவேந்தல்களை மேற்கொள்ள விட மாட்டார்கள். குழப்புவார்கள். எனவே, இம்முறையும் குழப்பம் வரலாம். அதற்கான வேலைகளை அரசு தரப்பு மேற்கொண்டுள்ளது.

கடந்த காலங்களில் உள்ள அரசு வேறு ஒரு வழியை கையாண்டது. இம்முறை உள்ள அரசு குழப்புவதற்காக கும்பல்களை ஏவிவிடும் வாய்ப்புகள் உள்ளது. இவற்றை எல்லாம் கடந்து எழுச்சியாக இந்த நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொள்ளுவோம்.- என்றார்.

---

# ???????????? ??????????? ????? ???????????? ?????? ???????????!



பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை இன்றைய தினமும்

முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இன்றைய தினம் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை கேகாலை பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தலைமையில் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், சர்வமதத் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

பயங்கரவாத தடை சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் நாட்டின் பல பாகங்களிலும் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில் நாளைய தினம் காலி முகத்திடல் பகுதியில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

---

# ?????? ??????? ??????????? ????




எல்லை தாண்டி மீன் பிடித்த எட்டு இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் இன்றைய தினம் (20) கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஒரு படகையும் அதிலிருந்த எட்டு இந்திய மீனவர்களையுமே, எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

கைதான மீனவர்களை மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்திற்கு அழைத்துச் சென்று, யாழ் மாவட்ட நீரியல்வளத்துறை

அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்படுவர்.